ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும்

₹15 (தமிழ்நாடு, புதுச்சேரி)
₹17 (மற்ற மாநிலங்களில்)

# நாணயம் விகடன்

7.7.13

பணத்தைப் பெருக்கும் தாரக மந்திரம்

பெர்சனல் லோன்:
**வலையில் சிக்காதீர்கள்!**

வி.பி.எஃப்:
**எக்ஸ்ட்ரா வரிச் சலுகை!**



# லாபம் தரும் பங்குகள்...

**சூப்பர் செலெக்‌ஷன் ஃபார்முலாக்கள்!**

வி.பி.எஃப்.:

# எக்ஸ்ட்ரா முதலீடு, எக்ஸ்ட்ரா வரிச் சலுகை!

**மாதச் சம்பளக்காரர்களுக்கு சேம நலநிதி (பிராவிடெண்ட் ஃபண்ட் - பி.எஃப்.) பற்றி அதிகம் சொல்லத் தேவை இல்லை. ஆனால், அதில் இருக்கும் ஒரு கூடுதல் வசதி பற்றி பலருக்கும் தெரியாமலே இருக்கிறது. அந்த கூடுதல் வசதி, விருப்ப சேமநல நிதி (வாலண்டரி பிராவிடெண்ட் ஃபண்ட் - வி.பி.எஃப்.) என்பதுதான்.**

பொதுவாக, ஒருவரது அடிப்படை சம்பளம் மற்றும் பஞ்சப்படியில் (டி.ஏ.) 12 சதவிகிதம் பி.எஃப். பிடிக்கப்படும். இதனுடன் வேலை பார்க்கும் நிறுவனம் 12 சதவிகிதம் சேர்த்து ஊழியரின் பி.எஃப். கணக்கில் போடும். இதற்கு தற்போதைய நிலையில் 8.5 சதவிகிதம் வட்டி வருமானம் வழங்கப்படுகிறது.

ஒருவர் தன்னிடமிருந்து பிடிக்கப்படும் பி.எஃப். தொகைக்கு இணையாக அல்லது அதற்கு குறைந்த தொகையை அவரது சம்பளத்திலிருந்து பிடித்து பி.எஃப். கணக்கில் சேர்க்க சொல்வதே வாலண்டரி பிராவிடெண்ட் ஃபண்ட் (வி.பி.எஃப்.). ஆனால், இத்தொகையோடு வேலை பார்க்கும் நிறுவனம் எந்தத் தொகையையும் போடாது.

நிதி ஆலோசகர் யூ.என்.சுபாஷிடம் இதுபற்றி பேசினோம். "சம்பளத்திலிருந்து கூடுதலாக பி.எஃப். பிடிக்க விரும்புகிறவர்கள், வேலை பார்க்கும் நிறுவனத்திற்கு கோரிக்கை கடிதம் தரவேண்டும். இதில், தற்போது பிடிக்கப்படும் பி.எஃப்.-ல் எத்தனை சதவிகிதம் பிடித்தம் செய்யவேண்டும் என்பதைத் தெரிவிக்கவேண்டும். முடிந்தவரை இந்த நடைமுறையை நிதி ஆண்டின் துவக்கத்தில் ஆரம்பிப்பது நல்லது. நிதி ஆண்டின் இடையில் தொடங்குவதும், நிறுத்துவதும் சற்று கடினம்.



யூ.என்.சுபாஷ்

இந்த வி.பி.எஃப். தொகை, உங்களின் பி.எஃப். கணக்கிலே சேருவதால் பணி ஓய்வின்போது அதிக தொகை கிடைக்கும். மேலும், இடையில் மருத்துவச் செலவு, உங்கள் திருமணம் அல்லது உங்கள் மகள்/மகன் திருமணம், மனை வாங்க, வீடு கட்ட என பணம் எடுக்கும்போது வி.பி.எஃப். தொகையும் சேர்ந்திருக்கும்பட்சத்தில் கூடுதல் தொகையை எடுத்துக்கொள்ள முடியும். இப்படி கூடுதலாக பி.எஃப். கணக்கில் சேரும் தொகைக்கு வருமான வரிச் சட்டப் பிரிவு 80சி பிரிவின் கீழ், ஒரு நிதி ஆண்டில் ஒரு லட்சம் ரூபாய் வரைக்கும் வரிச் சலுகை உண்டு" என்றார்.

ரிஸ்க் இல்லாத முதலீடு, கூடுதல் வரிச் சலுகை தரும் வி.பி.எஃப்.பை இனியாவது பலரும் பயன்படுத்தலாமே!

- இரா.ரூபாவதி.



www.vikatan.com